மார்கழி மாத விடியல் பொழுது , இன்னும் முழுமையாக இருள் விலகாத அறையில் உறங்கிக்கொண்டு இருக்கிறான் பாலா.... அறையின் கதவு திறக்கப்பட, அந்த வெளிச்ச கீற்றின் வழியே உள்ளே நுழைந்தார் ராஜசேகர்.... அறைக்குள் நுழைந்து ஒவ்வொரு அடியும் தயங்கியபடியே உள்ளே வைத்தார்.... கட்டிலின் அருகே, பாலாவின் தலைப்பகுதியின் அருகே நின்றவாறு அவன் முகத்தை உற்று நோக்கினார்... அருகில் இருந்த நாற்காலியை கட்டிலின் அருகே இழுத்துப்போட்டு, அதில் அமர்ந்தவாறே பாலாவின் தலை முடியை கோதி விட்டார்... கைகள் அவன் கன்னங்களை தொட்டபோது, அவர் கைகளில் பிசுபிசுப்பை உணர்ந்தார், இரவு முழுக்க அழுதிருக்க கூடும்.... அதை எண்ணியபோதே அவர் கண்களில் நீர் முட்டிக்கொண்டு நின்றது.... கைகளை பாலாவின் உதட்டருகில் கொண்டுபோனபோது, அந்த கை பட்டதில் அவன் “ஸ்ஸ்ஸ்....” என்றான்.... ஒரு வாரமாகியும் இன்னும் அந்த காயம் முழுமையாக ஆறவில்லை... “எவ்வளவு மூர்க்கமாக நடந்திருக்கிறேன்!.... இப்போவரைக்கும் வலிக்கும் அளவுக்கு அடிச்சிருக்கேன்!” மனதிற்குள் தன்னையே நொந்துகொண்டார்...

ராஜசேகர் இப்படி யோசித்துக்கொண்டு இருக்கும்போது விழித்துவிட்டான் பாலா... தன் முகத்தை இவ்வளவு நேரம் வருடிய கை அப்பாவுடையதா?.... நம்பவே முடியல!... மீண்டும் ஒருமுறை கண்களை உள்ளங்கைகளால் கசக்கி பார்வையை தெளிவாக்கிவிட்டு பார்த்தான் பாலா.... ஆம்!, உண்மையாகவே அப்பாதான்...

“அப்பா....” அதிர்ச்சியும் சந்தோஷமும் கலந்த வார்த்தைகளில் பாலா....

“எழுந்திருப்பா.... வா, வெளில போயிட்டு வரலாம்”

“எங்க?.... எங்கப்பா?” அதிர்ச்சி விலகாமல் கேட்டான்....

“இன்னிக்கு சண்டே, எங்கயாச்சும் வெளில போயிட்டு வரலாம்”

பள்ளி நாட்களுக்கு பிறகு இப்படி இருவரும் சேர்ந்து வெளியே போனது எப்போது? என்று பாலாவிற்கு இரண்டு நிமிட யோசிப்புக்கு பிறகும் நினைவில் வரவில்லை.... . ஒரு வாரமாக இந்தியா-பாகிஸ்தான் போல முறுக்கிக்கொண்டு இருந்தவர், இன்னைக்கு திடீர்னு எல்லாத்தையும் மறந்துட்டு காந்தியவாதி போல பேசினால் பாலாவால் அதிர்ச்சி ஆகாமல் எப்படி இருக்க முடியும்?.... அப்பாவோ முழு பிடிவாதக்காரர்... அதுவும் சாதாரண சின்ன சண்டைகளில் கூட, அவர் பக்கம் தவறு இருந்தால் கூட, அடுத்தவங்க மன்னிப்பு கேட்கணும்னு எதிர்பார்க்குற அளவுக்கு ஈகோ பார்க்குற ஆசாமி.... இவ்வளவு பெரிய விஷயத்தில் தானாகவே வந்து பாலாவிடம் பேசிய அதிர்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும், பேசிவிட்டதன் மகிழ்ச்சியே அவன் மனம் முழுக்க பட்டாம்பூச்சியாக சிறகடித்து பறந்தது....

அதனால் அதற்கு மேலும் ஆராய்ச்சிகளில் இறங்க விரும்பாமல், “சரிப்பா.... இதோ கிளம்பிடுறேன்” என்றவாறே படுக்கையை விட்டு துள்ளி எழுந்தான் பாலா.... கதவருகே சென்றபோது, “பாலா....” என்றழைத்தார் அப்பா....

“என்னப்பா?”

*“ரொம்ப வலிக்குதாப்பா?”*

*உதட்டருகே இருந்த காயத்தை தடவியபடியே, மெல்லிய புன்னகை உதிர்த்த பாலா, “இப்போ வலிக்கலப்பா!” என்றான்....*

*இறுக்கமான அப்பாவின் முகத்தில் ஒரு வாரத்துக்கு பிறகு இப்போதுதான் பாலா மென்மையான வார்த்தைகளை கேட்கிறான்....*

*குளித்து முடித்து, இருவரும் சாப்பிட்டு முடித்து வெளியே கிளம்பினர்... அப்பா கார் ஓட்ட, அருகில் பாலா சந்தோஷமும் குழப்பமும் கலந்த முகத்தோடு அமர்ந்திருந்தான்....*

*கார் கிளம்பியது முதல் எப்.எம் தானாகவே ஒலிக்க தொடங்கியது.... பத்து நிமிடங்கள் இருவரையும் எதுவும் பேசவிடாமல் எப்.எம்’இல் தொகுப்பாளினி இடைவிடாமல் பேசிக்கொண்டு இருந்தார்... பொறுமை இழந்த அப்பா, அதை அணைத்துவிட்டு பாலாவை பார்த்தார், “பொதுவா வேலை பார்க்கும்போது பேசக்கூடாதுன்னு சொல்வாங்க... இவங்களுக்கல்லாம் பேசுறதே வேலையா ஆகிடுச்சுல்ல?...” என்று சிரித்தார்... பாலாவிற்கு இது மேலும் ஆச்சரியம், அம்மா இறந்த நான்கு ஆண்டுகளில் அப்பா இப்படி பேசியும் சிரித்தும் இவன் பார்த்ததே இல்லை... அம்மா இருந்தபோதும் கூட அப்படித்தான், அவங்களோட ஒரே கவலை அப்பா சிரிக்குறதில்லை’னு அடிக்கடி சொல்வாங்க... இப்போ ஒரு நாள் இரவில் அப்பாவுடைய இந்த மலையளவு மாற்றத்துக்கு காரணம் என்ன? என்று பாலா யோசித்தான்....*

*“என்னப்பா பேசாம வர்ற?... புது கம்பெனி எதுலையோ வேலை கிடைச்சதா சொன்னியே, எப்போ ஜாப்’கு கூப்பிடுவாங்க?”*

*“இன்னும் ஒரு வாரத்துல போற மாதிரி இருக்கும்பா”*

*“சென்னை தானே?”*

*“இல்ல, பெங்களூர்”*

*“அன்னிக்கு சென்னை’னு சொன்ன?”*

*“விவேக்’கு பெங்களூர்ல கிடைச்சதால நானும் அங்கேயே மாத்திக்கிட்டேன்”*

*அப்பாவிடம் பதில் எதுவும் இல்லை.... பதில் வராது என்பது பாலாவுக்கும் தெரியும்.... வேலை சென்னையில் கிடைக்காததற்கோ, பெங்களூரில் கிடைத்ததற்கோ அப்பா கோபப்படமாட்டார்.... ஆனால், அதற்கான காரணமாக “விவேக்”கை சொன்னது அப்பாவால் நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாத விஷயமாக இருக்கும்... இந்த ஒருவார கலவரத்துக்கும் மையப்புள்ளி விவேக் தானே!...*

ஒரு வாரத்திற்கு முன்பு, “தஞ்சாவூர்’ல உங்க மைதிலி அத்தை மகளை உனக்கு கட்டணும்னு ரொம்ப மெனக்கடுறாங்க... நல்ல குடும்பம், வசதி வாய்ப்புன்னு பாரம்பரியமான ஆளுங்க... பொண்ணு கூட ஐடி தானாம்....பேசிடலாம்ல?” நாளிதழிலிருந்து முகத்தை எடுக்காமல் அப்பா கேட்ட கேள்விக்கு பாலா சொன்ன பதிலால் ராஜசேகர் மட்டுமல்ல, அந்த இடத்தில் எந்த அப்பா இருந்திருந்தாலும் அப்படித்தான் கோபப்பட்டிருப்பார்....

“வேணாம்பா..... எனக்கு கல்யாணம்லாம் வேணாம்”

“ஏன்?... சாமியாரா ஆகப்போறியாக்கும்?”

“இல்ல...”

“அப்புறம் என்னவாம்?”

“நான் லவ் பண்றேன்...”

அப்போதுதான் நாளிதழிலிருந்து முகத்தை எடுத்து, பாலாவின் முகத்தை பார்த்தார்.... அந்த பார்வையில் நிச்சயமாக கோபம் இல்லை, லேசான ஆச்சரியம் மட்டுமே தென்பட்டது.....

“நெஜமாவா?”

“ஆமா...”

“யாரை?”

“விவேக்...”

“நம்ம விவேக்கோடா தங்கச்சியா?”

“இல்லப்பா.... நம்ம விவேக் தான்”

ஆச்சர்யப்பார்வையில் இப்போதுதான் அதிர்ச்சி அலைகள் படர்ந்து காணப்பட்டது.....

“என்ன உளர்ற?”

“உளறல... நெஜமாதான்... நான் ஒரு கே”

இப்படி பாலா சொன்னதற்கு பிறகு, அந்த ஒருவாரமும் வீடு ஒரு மயான பூமியாகத்தான் காட்சி அளித்தது.... கோபமாக, பாசமாக, மிரட்டலாக, பயமுறுத்தும் விதமாக என்று விதவிதமாக பாலாவிடம் பேசியும், அவன் கொஞ்சமும் கீழே இறங்கி வருவதாக தெரியவில்லை....

“இது என் வாழ்க்கை.... நீங்க சொல்றதுக்காக யாரையோ ஒரு பொண்ணை கட்டிக்கிட்டு காலம் முழுக்க நான் கஷ்டப்பட முடியாது.... எனக்கு ஜாப்

*கிடைச்சிடுச்சு.... நானும் விவேக்கும் இன்னும் கொஞ்ச நாள்ல கனடா போய், அங்க கல்யாணம் செஞ்சுகிட்டு வாழப்போறோம்.... சொசைட்டி, சொந்தம்'னு பார்க்காம, உங்க பிள்ளை சந்தோசம் முக்கியம்னு நினச்சா நீங்களும் எங்ககூட கனடா வாங்க.... இல்லைனா, இனி எதுவும் வேணாம்... அம்மா இறந்ததோட நானும் இறந்துட்டதா நினைச்சுக்கோங்க" இதுதான் நேற்று இரவு பாலா அப்பாவிடம் சொன்ன இறுதி வார்த்தைகள்... ஒரு வார காலமாகவும் அழுகையை மட்டுமே அப்பாவிற்கு பதிலாக தந்த பாலா, தன் மனம் திறந்து இவ்வளவையும் அப்போதுதான் பேசினான்.... இரவில் இப்படி பேசிவிட்டதை நினைத்து நள்ளிரவை தாண்டியும் அழுத பாலாவிற்கு, விடிந்ததும் இப்படிப்பட்ட அப்பாவின் மாற்றம் மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது....*

*அன்றைய முழுப்பொழுதும் முருகன் கோவில், ஐஸ் க்ரீம் பார்லர், நான் வெஜ் ஹோட்டல், பார்க், தியேட்டர் என்று சிறுவயதில் பாலா அடிக்கடி அழைத்து செல்ல சொல்லும் இடங்களுக்கு அழைத்து சென்றார்.... ஐஸ் கிரீம் பார்லரில், "உனக்கு வெண்ணிலா தானே பிடிக்கும்?"*

*"ஆமாப்பா" என்றான் பாலா அமைதியாக.... சிறுவயதில் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாலோ, விளையாட்டில் முதல் பரிசு பெற்றாலோ, மகிழ்ச்சியான தருனங்களிலோ அப்பா அழைத்து செல்வது ஐஸ் கிரீம் பார்லர்... இப்போதும் அப்பா பாலாவை அந்த பத்து வயது சிறுவனாகவே பார்ப்பது ஒருவிதத்தில் ரசிக்கும்படிதான் அவனுக்கு இருந்தது...*

*ஐஸ் கிரீம் பார்லரில் வெண்ணிலா, தியேட்டரில் விஜய் படம், புத்தக கடையில் சுஜாதாவின் சிறுகதை தொகுப்பு, உணவகத்தில் பெப்பர் சிக்கன் என்று அன்றைய முழுப்பொழுதும் பாலாவின் எண்ணங்களின் பிரதிபலிப்பாக அப்பா ஒவ்வொன்றையும் செய்தார்... பாலாவை முழுமையாக தான் புரிந்துகொண்டதாக அவர் ஒவ்வொரு செயலும் செய்த பின்னர், அவர் முகத்தில் ஒரு பெருமித பார்வை தொனிக்கும்... பாலாவிடம் தன் பாசத்தை நிரூபித்து காட்டிவிட்டதாய் ஒரு உள்ளளவு மகிழ்ச்சி அவருக்குள்....*

*எல்லா இடங்களையும் சுற்றிவிட்டு இருவரும் மீண்டும் வீடு திரும்புகையில் நேரம் இரவு எட்டு ஆகிவிட்டது....*

*அலைச்சலால் உண்டான களைப்பின் மிகுதியால் தன் அறைக்கு சென்று படுத்துவிட்டான் பாலா.... படுத்தாலும் களைப்பையும் மீறி, அன்றைய பொழுதின் ஒவ்வொரு நிகழ்வும் அவனை வெகுவாக யோசிக்க வைத்தது... "என் மன ஓட்டத்தை கண்டுபிடிக்க அப்பாவின் முயற்சியா இது?" என்று தன்னையே கேள்வி கேட்டுக்கொண்டான்... அப்படி யோசித்து முடிக்கும் முன்னரே அறைக்கதவை திறந்து உள்ளே நுழைந்தார் அப்பா....*

*அப்பாவை பார்த்ததும் கைகளை ஊன்றி மெல்ல எழுந்து கட்டிலில் அமர்ந்தான்... அப்பாவின் கைகளில் பாலை பார்த்த பாலா, "ஏன்பா இதல்லாம்?.... அதான் நல்லா சாப்டோம்ல?... நீங்க ரெஸ்ட் எடுங்கப்பா?" என்றான்...*

“பரவால்லப்பா... இன்னிக்கு சந்தோஷமா இருந்தியா?”

“ஹ்ம்ம்... ரொம்ப சந்தோஷம்பா.... ஆனால்???”

“என்ன சொல்ல வரன்னு புரியுது... உன்னைப்பத்தி நான் எவ்வளவு புரிஞ்சு வச்சிருக்கேன்னு உனக்கு இன்னிக்காச்சும் தெரிஞ்சுதா?.... உங்கம்மா இருந்த வரைக்கும் நாம அதிகம் பேசிக்க வேண்டிய வாய்ப்பு இல்லாம போய்டுச்சு, இப்போ பேச முடியாத சூழ்நிலை உண்டாகிடுச்சு... ஆனாலும், உன்ன நான் ஒவ்வொரு விஷயத்துலயும் புரிஞ்சுவச்சிருக்கேன் பாலா... ஆனால், நீதான் என்னப்பத்தி கொஞ்சம் கூட புரிஞ்சுக்கல, புரிஞ்சுக்க முயற்சி கூட பண்ணல...”

“உங்களப்பத்தியும் எனக்கு நல்லா புரியும்பா... கே பற்றி ரொம்ப தப்பான மனநிலைல இருக்குற சமூகத்துல வாழற இயல்பான அப்பாதான் நீங்களும்... என்னைய அடிச்சதோ, திட்டுனதோ நிச்சயம் உங்க தப்பில்லை... ஆனால், மத்த எல்லாத்த பத்தியும் இவ்ளோ யோசிக்குற நீங்க, இப்போவரைக்கும் என்னயப்பத்தி யோசிக்கவே இல்லையேப்பா?... இவ்வளவுக்கு பிறகும் உங்களுக்கு உங்க சமூகம்தான் முக்கியமா போச்சுல்ல?”

“வேணாம் பாலா... இதப்பத்தி இனி பேசவேணாம்... இதுக்கு மேல நீயோ நானோ அவங்கவங்க எண்ணங்களை மாத்திக்க போறதில்ல... இனி பேசுறது வேஸ்ட்...” கையில் இருந்த பாலை பாலாவின் முன்பு நீட்டினார் அப்பா...

“பாலை டேபிள்’ல வச்சுட்டு நீங்க போங்க.... பெத்த பையனை கொன்ன பாவம் உங்களுக்கு வேணாம், நானே அந்த விஷம் கலந்த பாலை குடிச்சுக்கறேன்....” என்ற பாலாவை அதிர்ச்சியோடு பார்த்தார் அப்பா... அந்த பார்வையில் குற்ற உணர்ச்சியும், அவமானமும் கலந்து காணப்பட்டது..... அதிர்ச்சியில் சுரந்த உமிழ்நீர் தொண்டைக்குள் அலைபோல இறங்கியது...

தன் செயலை எப்படி பாலா கண்டுபிடித்தான்? என்கிற ஒரு சிறிய குழப்பமும் அவர் பார்வையில் தென்பட்டது..... கைகளில் நடுக்கமும், உடல் தசைகளில் பதட்டமும் அவரை செய்வதறியாது தவிக்க வைத்தது....

“இப்போகூட உங்களைப்பத்தி நான்தான் சரியா புரிஞ்சு வச்சிருக்கேன் பார்த்திங்களா?” சத்தமிட்டு சிரித்தவாறே அப்பாவின் முகத்தை பார்த்தான் பாலா.... கால்களில் பலம் இழந்து, மண்டியிட்டு அமர்ந்து, தலையிலடித்து அழத்தொடங்கினார் ராஜசேகர்.... அவ்வளவு நாட்களும் தன் மனதிற்குள் பூட்டியிருந்த வருத்தங்கள், கண்ணீராக தரையை நனைத்தது.... அவரை தடுக்கவோ, ஆசுவாசப்படுத்தவோ முடியாத நிலையில், பாலாவின் கண்களிலும் கண்ணீர் கரைபுரண்டு ஓடியது...

எந்த உடலின் ஆவியை எடுப்பது? என்பது புரியாமல் ஆவியாகிக்கொண்டு இருந்தது மேசையில் இருக்கும் பால்.... (முற்றும்)